தமிழ்ச்சிட்டு

உடல் நலமே!
உள்ள நலம்!

அண்ணன் தாண்டு கின்றான்!
அழகாய்த் தாண்டு கின்றான்!
திண்ணென் றாகும் உடலும்!
திரளும் தோளும் காலும்!

ஓடித் தாண்டு கின்றான்;
உயரத் தாண்டுகின்றான்;
நாடி நரம்பும் தசையும்
நன்றாய் வலிவாய் வளரும்!

உடலம் நன்றாய் இருந்தால்
உளமும் நன்றாய்த் திகழும்!
கெடல்செய் நோய்கள் அணுகா;
கீழ்மை நினைவுகள் தோன்றா!

பயிற்சிகள் உடலைக் காக்கும்;
பண்புகள் உளத்தை ஊக்கும்!
அயர்ச்சிகள் வாழ்வைக் கெடுக்கா!
அனைத்தும் நலமே சேர்க்கும்!

குரல்: 10;
இசை: 5.
விலை: 35காசு.

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

முத்துமொழிகள்

- உண்மையை எண்ணுக! உன் எண்ணம் பசித்த உலகிற்கு உணவாகும்! உண்மையைப் பேசுக! உன் ஒவ்வொரு சொல்லும் நன்கு முதிர்ந்த விதையாகும்! உண்மையாகவே வாழ்க! உன் வாழ்க்கை மிகச்சிறந்த கொண்முடியாகத் திகழும்!
  —கோரேசு போனேர்.
- எங்கே தற்பெருமை முடிவடைகிறதோ அங்கேதான் நேர்மை (dignity) துவங்குகிறது. —எங் (Young)
- செயலைச் சொல்லொடு பொருத்து!
  சொல்லைச் செயலொடு பொருத்து! —சேக்சுபியர்.
- நேர்மையே இனிமையானது. —பித்தகோரசு.
- கற்பே அழகு. —சேக்சுபியர்.
- நேர்மையே எல்லா அரசுகளையும் விட உயர்ந்தது. —சிவிப்டு.
- 'உண்மை' செம்பால் ஆன மதிற்சுவரைக் காட்டிலும் உறுதியான காவலனுகும் (guard). —எட்மண்டுவேலர்.
- நேர்மைக்கு பரிசு நேர்மையே! —சிசிரோ.
- உண்மை ஒரு தெய்வம் (angel). —கோரேசுமேன்.
- எல்லாம் அறிந்தவரும் இலர்; ஒன்றும் அறியாதவரும் இலர்.
  —தாயுமானுர்.
- பொறுமை மூடர்களை ஆள்கிறது. —பைபிள்.
- ஒருவனின் நண்பன் அவனின் மறுபதிப்பு. —பேக்கன்.
- உண்மையான அன்பு மெள்ளச் செல்லாது. —சேக்சுபியர்.
- தன்னையே பெரிதாய் மதித்துக்கொள்ளும் குணம் பெற்ற மாந்தர்களால் மாந்த இனத்திற்குப் பயன் ஒன்றும் இல்லை. —பேக்கன்.
- பணத்தின் மீது இருக்கிற ஆசையே எல்லாக் கொடுமைகளுக்கும் ஆணிவேர்.
  —பைபிள்.
- 'பாடல்' என்பது உண்மையை மகிழ்ச்சியுடன் சேர்த்துக் கற்பனை வளத்துடன் பகுத்தறிவின் துணைகொண்டு உருவாக்கும் கலையாகும். —பர். சான்சன்.

தொகுப்பு: சி. நா. செந்தமிழ்ச்செல்வன்

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலைஇதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல் 10] தி.பி. 2009. கடகம்-மடங்கல் (சூலை-ஆக. 1978) [இசை-5

தூய்மை உணர்வு.

அறிவின்பாற்பட்ட நல்லுணர்வுகளில் தூய்மை உணர்வும் ஒன்றாகும். சிற்றுயிர் இனங்களிலும் பெரும்பாலானவற்றிற்குத் தூய்மை உணர்வு உண்டு. இத்தூய்மை உணர்வு மிக வளர்ந்த நிலையில் மக்களிடம் இருக்கிறது. தூய்மை உணர்வு குறைந்த மக்கள், விலங்குகள், பறவைகளிலும் கீழானவர்களாகவே மதிக்கப் பெறுவர். நாகரிக வளர்ச்சியில் தூய்மை உணர்வு மிக மேம்பட்ட உணர்வாக மதிக்கப் பெறுகிறது. மக்கள் ஒருவரோடு ஒருவர் மிக நெருங்கிப் பழக வேண்டியவர்களாக விருப்பதால், இத் தூய்மை உணர்வு அவர்களுக்கு மிகவும் தேவையாக இருக்கிறது. அதுவன்றித் தூய்மை உணர்வு மக்கள் உடல் நலத்திற்கும் மிகத்தேவையான ஓர் உணர்வு. தூய்மை இல்லாத மக்களிடத்தில் நோய்கள் வரும் வாய்ப்புகள் மிகுந்திருக்கும். எனவே தூய்மையுணர்வு ஒரு வகையில் இறைமைக்குச் சமமாகக் கூட மதிக்கப்பெறும்.

தூய்மை என்பது உடல் நிலையைப் பொறுத்ததாக மட்டுமன்றி உரைத்தூய்மை உள்ளத்தூய்மை என்னும் நிலைகளிலும் அறிஞர்

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்,
தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005, (தமிழகம்)

களால் வலியுறுத்தப் பெறுகிறது. கூறும் கூற்றுகள் எவர்க்கும் எங்கும் தீமை தராதனவாக இருப்பதை வாய்மை என்பார் திருவள்ளுவர்.

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்.

—என்பது அவர் வாய்மையுரை. அதேபோல் எண்ணத்தில் தூய்மையாக—குற்றமில்லாமல் இருப்பதே எல்லா வகையான அறமும் ஆகும் என்பது அவரின் மாசில்லா நல்லுரை.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

—என்பது குறளறம்,

உள்ளத்தூய்மை, உரைத்தூய்மை இவை இரண்டும் மிக வளர்ச்சி பெற்ற அறிவுணர்வுகளாகும். உடல் தூய்மையோ பெரும்பாலும் எல்லாவகை மக்களுக்கும் பொதுவாக வேண்டப்பெறும் ஓர் உணர்வாகும். இவ்வுணர்வின் தேவை பற்றியே இங்கு மிகுதியாகப் பேசப் பெறுகிறது.

பொதுவாக நாம் தூய்மையில்லாதவர்களிடத்தைவிடத் தூய்மை உள்ளவர்களிடத்திலேயே ஈடுபாடாக நெருங்கிப் பேச விரும்புகிறோம். அழுக்கு உடை உடுத்திருப்பவரைவிட வெள்ளையாகத் தூய்மையான உடை உடுத்தவரிடம் எல்லார்க்கும் கவர்ச்சி உண்டு. முகம் தூய்மையில்லாத தூங்கு மூஞ்சிகளிடம் யாரும் பேசக்கூட விரும்ப மாட்டார்கள். தூய்மைக் குறைவான இடத்தில் நாம் நிற்கவும் விரும்பமாட்டோம் குப்பை மேட்டில் யாராவது படுத்துறங்க விரும்புவார்களா? ஈக்களைப் போலும் பன்றிகளைப் போலும் மலக் குவியல்களிடையில் உலாவித் திரியும் தன்மையுடையவர்கள் மக்களறிவில் குறைந்தவர்களாகவே இருத்தல் முடியும். சாணிச் சகதிகளுக்கிடையில் மாடுகளும் படுக்க விரும்பாமல் நின்று கொண்டிருப்பதை நீங்கள் பார்த்திருக்கலாமே!

இவ்வுலகில் எல்லா மக்களும் தூய்மையை விரும்புகின்றனர். காலையில் எழுந்ததும் பல்விளக்கிக் கொள்வதிலிருந்து, இரவில் படுக்கைக்குப் போகுமுன் வாய்கொப்பளித்து விட்டுப் படுக்கும் வரை எல்லாவினைகளிலும் தூய்மையுணர்ச்சியே அடிப்படையாக நிற்கிறது. ஆனால், சிலர் தூங்கி விழித்ததும் வாய் எச்சிலை அடக்கி வைத்துக் கொண்டோ, வாய் கொப்பளிக்காமலோ முகம் கழுவாமலோ—குளிக்கும் வரை—எல்லாரிடமும் பேசிக் கொண்டிருப்பதும், கடைத் தெருவுக்குப் போய் வருவதும், செய்தித்தாள் படிப்பதும், குளம்பி தேநீர் குடிப்பதும் ஆகிய செயல்களைக் கொஞ்சமும் கூச்சமும் அருவருப்புமின்றிச் செய்வதைப் பார்க்கலாம். சிலர் அந்தக் கழுவாத முகத்துடனும் தீநாற்ற எச்சில் வாயுடனும் குழந்தைக்களை கொஞ்சுவதையும் அவற்றுக்கு முத்தங்களைக் கொடுப்பதையும், அவர்கள்

வாய்களில் தங்கள் வாய்களை வைத்து முத்துவதையும் கண்டிருக்க லாம். இவையெல்லாம் தூய்மையில்லாத அநாகரிகச் செயல்களே! ஒருவகை அன்பு கலந்த அறியாமை வகையாலன்றி அறிவுணர்வு மிக்க எவரும் இவற்றைச் செய்யவும், செய்வதைப் பார்த்துக் கொண் டிருக்கவும் விரும்பார். இன்னுஞ்சிலர் தூங்கியெழுந்தவுடன் கண் களில் பீளை தள்ள, வாய்க் கடைகளில் காய்ந்த எச்சில் தாரைகளுடன் பல்லைக் காட்டிக்காட்டி, உட்குடல் காற்று எதிர் நிற்பவர் முகத்தின் மேல் எல்லாம் குபீர்குபீர் என்று பாய்ந்து வீசும்படி, பிறரைப் பற்றியே கவலைப்படாமல், உரக்க உரக்கச் சிரித்து ஓங்காரப் பேச்சுப் பேசுவதை ஒரோவோர் இடங்களில் கண்டிருக்கலாம். இவையெல்லாம் நாகரிகமற்ற தூய்மையில்லா அருவருக்கத்தக்க செயல்களே!

நமக்கு முன்னால் நிற்பவர் முதலில் நம் முகத்தையே பார்க்கும் வாய்ப்புடையவர். அடுத்து நம் உடைகள், நம் கைகால் அசைவுகள் முதலியவற்றில் அவர் கவனம் செல்லும். அதன் பின்னர் தான் நாம் பேசும் பேச்சிலும், அதன் பின்னர் அப்பேச்சின் கருத்திலும் அவர் கவனம் செலுத்துவார். நம்மைப் பார்த்த பார்வையிலேயே நம் கண்களில் பீளை தள்ளியிருப்பதையோ, முகத்தில் அழுக்குப் படிந் திருப்பதையோ, பல்லில் உணவுத்துகளோ, தின்பண்டத் துணுக்கோ ஒட்டியிருப்பதையோ பார்த்துவிடுவாரானால் அதன் பின் நாம் எத்துணைதான் அன்பு கனியக் கனியவோ, அறிவு முதிர முதிரவோ பேசினாலும் நம் முகத்தில் வடியும் அருவருப்புகளைத்தான் அவர் பார்த்துக் கொண்டிருக்க முடியும். அவற்றுக்கிடையில் நம்முடைய அன்பும்அவருக்குப் புலப்படாது; நம் அறிவும் அவருக்கு விளங்காது. எனவே தாம் சொல்வதைப் பிறர் கேட்க வேண்டும் என்று விரும்பு கிறவர்கள், முதலில் தம் முகம் தூய்மையாக—பிறர் பார்த்து அருவருப்படையாத வகையில்—உள்ளதா என்று கண்ணாடியில் ஒரு முறை பார்த்துக் கொள்ளல் வேண்டும். அடுத்தபடி தம் வாய் தூய்மை யாக உள்ளதா, நாம் பேசும்போது அதிலிருந்து வெளியேறும் காற்று பிறர் அருவருப் படையாதவாறு உள்ளதா என்றெல்லாம் பார்த்துக் கொள்ளுதல் நல்லது.

நாம் தனியாக இருக்கையில் எப்படியும் இருக்கலாம். யாருக்கும் அதைப்பற்றிக் கவலையிராது. ஆனால் நான் குபேர் நடுவில் இருக்க நேரும்பொழுது, நாம் பிறர் அருவருப் படையாதபடி தூய்மையாக இல்லாத பொழுது பிறர் நம்மொடு நெருங்குவதும் ஈடுபடுவதும் குறைவாக இருக்கும். இன்னுஞ் சொன்னால் நம்மேல் பிறர் காட்டும் அன்புக்கும் பரிவுக்கும் அக்கறைக்கும் ஆர்வத்திற்கும் கூட நம்பால் உள்ள தூய்மையுணர்வும் ஒரு வகைக் கரணியமாகும். நாம் அழகில் குறைந்திருப்பதைப் பற்றிக் கவலையில்லை; ஆனும் தூய்மையாக நம் முகம் துலங்குதல் வேண்டும்; உடைகள் விளங்குதல் வேண்டும். அப்பொழுது தான் ஒரு கவர்ச்சி பிறரை நம்பால் அக்கறை கொள்ளச் செய்யும். தூய்மையென்பது ஆரவாரம் தோய்ந்த உறுப்பு வெளிப்

பெருந்தின்னி

அரசர் அக்பரும் அவர் மனைவியும் ஒருநாள் நிலா முற்றத்தில் அமர்ந்து மாம்பழம் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அக்பர் வேடிக்கையாகத் தாம் தின்று எஞ்சிய தோல்களையும் கொட்டைகளையும் அரசியின் பக்கம் சேர்த்து வைத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர் அமைச்சரும் நண்பருமான பீர்பால் அங்கே வந்தார். நண்பரைக் கண்டதும் அக்பர் அரசியைப் பகடி செய்ய வேண்டும் என்று நினைத்தார்.

'இதோ பாருங்கள் பீர்பால்! அரசி எவ்வளவு பெருந்தின்னியாக இருக்கிறாள். இருந்த மாம்பழங்களில் முழுவதையும் இவளே தின்று தீர்த்துவிட்டாள். இத்தனைத் தோல்களையும் கொட்டைகளையும் குவியலாகக் குவித்திருப்பது இவள்தான்!' என்றார் அக்பர்.

'அரசே! இது தங்கள் தொடர்பினால் ஏற்பட்ட விளைவு' என்றார் பீர்பால்.

'என்னது! என் தொடர்பினாலா இவள் பெருந்தீனிக்காரியாகி விட்டாள் என்கிறீர்? எப்படி?' என்றார் அக்பர்.

'அரசே! மனைவி எப்பொழுதும் தன் கணவனையே பின்பற்றுகிறாள்' என்றார் பீர்பால்.

'அவ்வாறானால் நானா பெருந்தீனிக்காரன்? தின்று மீந்த தோல்களும் கொட்டைகளும் அவள் பக்கத்தில்தாமே இருக்கின்றன. ஒன்று கூட என்பக்கத்தில் இல்லையே!' என்று அக்பர் சொன்னார்.

"ஆம்! அதனால்தான் நானும் கூறுகிறேன். அரசே! அரசியோ, பழங்களை மட்டுமே சாப்பிட்டுள்ளார். நீங்களோ, தோல்களையும் கொட்டைகளையும் கூட விட்டுவைக்கவில்லையே' என்றார் பீர்பால்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

பாடும் அன்று. தூய்மையே அழகு; தூய்மையே, கவர்ச்சி; அதுவே அன்புக்கும் நட்புக்கும் அடிப்படை.

தூய்மை எவ்வாறு உடலுக்கு உயர்வையும் நலத்தையும் உண்டாக்கிக் கொடுக்கின்றதோ, அவ்வாறு வாய்மையே நம் பேச்சுக்கு ஒரு மதிப்பையும் வலிமையையும் உண்டாக்கிக் கொடுக்கின்றது. இனி, நம் வினைகளுக்கு அத்தகைய உயர்வையும் உரத்தையும் உண்டாக்கிக் கொடுப்பது நாம் கடைப்பிடித்தொழுகும் வினைத்தூய்மையே; அஃதாவது நேர்மையும், பிறர்க்கு நலந்தரும் செயலுமேயாகும் என்பதையும் அறிந்து கொள்க.

—பெருஞ்சித்திரனார்

மருத்துவக்கலை.

தொகுப்பு: புலவர். பொன்முகிலன்.

உலகிலேயே முதன்முதலாக

1. மருத்துவத்தைத் தனிக்கலையாகப் போற்றியவர்:

பண்டைத் தமிழ் நிலப் பண்டுவர்களும் கிரேக்க அறிஞர் கிப்போக்கிரேட்டிசும். பிற்காலத் தமிழ் மருத்துவர்களிடம் மந்திரம், பாடம், மணி போன்றவை கலந்துள்ளன. ஆயின் குமரி நிலத் தமிழ் மாந்தரிடம் உணவுக்கலையே மருத்துவக்கலையாக உருவாக்கப்பட்டது என்பதற்கும், நாடியறியும் நயம் செறிந்த-நலம்மிக்க முறையே கையாளப்பட்டதற்கும், மூடநம்பிக்கைகளோ 'மந்திர-தந்திர-மாயங்களோ' இடம் பெறவில்லை என்பதற்கும் திருவள்ளுவரின் மருந்து என்னும் அதிகாரமே தக்க சான்றாகும்.

ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த 'கிப்போக்கிரேட்டிசு' வே மருத்துவக் கலையின் தந்தை என அழைக்கப்படுகிறார். எந்த மூடநம்பிக்கைக்கும் உட்படாமல் எல்லாவற்றையும் அறிவின் துணை கொண்டு முடிவு கண்டவர் இவர். அக்காலத்தில் கிரேக்கத்தில் கால்கை வலிப்பு (காக்காய்வலிப்பு) நோயைப் புனித நோய் எனப்போற்றி, அந் நோயுற்றவர்களைக் கும்பிட்டனர். நோய்களுக்குப் புனிதத் தன்மை கற்பித்தல் மாந்தனின் அறியாமையைக் காட்டுகிறது என்பதை இவர் தெளிவுபடுத்தினார்.

மருத்துவன் கூடுமானவரை குறைந்த பண்டுவம் செய்து, இயற்கை தனது பண்டுவத்தைச் செய்ய வாய்ப்பளிக்க வேண்டும் என்பதே கிப்போக்கிரேட்டிசின் மருத்துவ முறையாகும். மந்திரம், மாயம், மதம் ஆகியவற்றிலிருந்து மருத்துவத்தைப் பிரித்து, வேறுபடுத்திக்காட்டி, இதைக் 'கலை' என முதன் முதலாக அழைத்தவர் இவரே.

2. மருத்துவமனை தோன்றிய இடம்:

தமிழர் தோற்றுவித்த மருத்துவமனை பற்றிய சான்றுகள் வெளிக் கொணரப் படவில்லை. மருத்துவக் கலையைத் தனியாக உருவாக்கிய தமிழர் மருத்துவமனையை அமைத்திருப்பர் என்பதில் சிறிதும் ஐயம் கொள்ள இடமில்லை. சோவியத்து நாட்டு அறிஞர்கள் கூறியுள்ளவாறு இந்து மாவாரியுள் இப்போது மூழ்கிக் கிடக்கும் குமரிநிலத் தமிழர்தம் பெரு நகரங்களைக் கடலக ஆய்வு செய்தால் உண்மையும் உயர்வும் வெளிப்படும்.

உரோம் நாட்டில்தான் தொடக்கத்தில் மருத்துவமனை அமைக்கப்பட்டது. இஃது அடிமை நோயாளிகளை நோய்க் காலங்களில் வைத்திருக்கும் காப்பு இல்லமாகும். ஆனால், பிற்காலத்தில் மருத்துவமனைகள் தோன்ற இக் காப்பு இல்லமே முன்னோடியாய் விளங்கியது.

3. மருத்துவக் கலையைக் கற்றுத் தந்த இடம்:

இத்தாலி நாட்டின் புகழ் பெற்ற நகரமாகிய நேப்பிள்சுக்குத் தென்கிழக்கில் இருந்த சாலர்னோ நகரமே உலகில் முதன் முதலாக மருத்துவக் கலையைப் பள்ளியில் சற்றுத்தந்த இடம்.

4. பண்டுவர் (டாக்டர்) பட்டம் தந்த பள்ளி:

மேற்குறிப்பிட்ட சாலர்னோ நகரில் அமைந்த மருத்துவப் பள்ளியே மருத்துவக் கலை கற்றவர்களுக்குப் பண்டுவர் (டாக்டர்) என்னும் பட்டத்தை முதன் முதலாக வழங்கியது.

5. உடற் கூற்றின் அடிப்படையை உருவாக்கியவர்:

ஏறத்தாழ ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாக உரோம் நாட்டு அறிஞரான கேலன் என்பவரது 'அரதத அலைகளின் அசைவாட்டம்' என்ற கொள்கையையே மருத்துவர்களும் நம்பிவந்தனர். ஆயின், பதினேழாம் நூற்றாண்டில் தோன்றிய, நுண்ணறிவும் விடாமுயற்சியும் உடைய வில்லியம் ஆர்வி என்பவரே உடலின் முதன்மைக் கூறாகிய குருதியோட்டத்தை முழுமையாக ஆராய்ந்து கூறி, மருத்துவ உலகில் மாந்த உடலியலுக்குச் சிறந்த அடித்தளத்தைச் செப்பமாக அமைத்துக் கொடுத்தார்.

தமிழர் தம் நாடியறியும் முறை குருதி யோட்டத்தை அடிப்படையாகக் கொண்டதே. எனினும், வில்லியம் ஆர்வியைப் போல நெஞ்சாங்குலை பற்றியும், குருதியோட்டம் பற்றியும்; இப்போது கிடைத்துள்ள தமிழ் மருத்துவ நூல்கள் எதுவும் முறையாகத் தெளிவுபடுத்தவில்லை. 0

திருவள்ளுவர் ஆண்டு

திருவள்ளுவர் ஆண்டை முதன்முதலில் தமிழுலகுக்கு அறிமுகம் செய்வித்தவர் மறைமலையடிகளே ஆவர். 18-1-1935-இல் திருவள்ளுவர் திருநாள் கழகத்தினர் நடத்திய திருவிழாவில் தலைமையுரையாற்ற வந்த அடிகள், "கிறித்து பிறப்பதற்கு 30 ஆண்டுகளுக்கு முன்னரே திருவள்ளுவர் பிறந்தார் என்பது நான் ஆராய்ந்து கண்ட முடிவாகும்" என்று அறிவித்தார்.

அதாவது, திருவள்ளுவர் ஆண்டைக் கிறித்துவ ஆண்டோடு 31 ஆண்டுகள் கூட்டிக் கணக்கிட வேண்டும் என்றார். காட்டாக, இப்போது கி.பி. 1978-ஆம் ஆண்டு நடைபெறுகிறது. இதனுடன் 31 ஆண்டுகளைக் கூட்டினால் 2009 ஆண்டு வரும். இதுவே திருவள்ளுவர் ஆண்டாகும்.

—நா. எழில்-மகிழ்நன்.

நிலவு குலுங்குகிறது!

நிலவு கடந்த 800 ஆண்டுகளாகக் குலுங்கிக் கொண்டிருப்பதாகக் கூறுகின்றனர். கி. பி. 1172 ஆம் ஆண்டு சூன் மாதம் 18-ஆம் நாள் இரவில் இலண்டனில் சில கிறித்துவத் துறவிகள் நிலாவில் தெரிந்த காட்சியைப் பற்றி எழுதிவைத்துள்ள குறிப்பையும் இக்கால் அடர்கதிர்க் (இலாசர்) கற்றைகளைக் கொண்டு நிலாவின் அசைவுகளை நுட்பமாக மதிப்பிட்ட விளைத்தங்களையும் ஆய்ந்து நிலவு குலுங்குகிறது என்ற முடிவை அறிவியல் (Science) என்ற அமெரிக்க அறிவியல் இதழில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் வானியலாளர்களான கலாமே, முல்காலண்டு இருவரும் தெரிவித்தனர்.

காண்ட்டர்பெரி (இலண்டன்) கிறித்துவத் துறவிகள் 18-6-1172-இல் இரவில் தெரிந்த ஒரு காட்சியை-வெறும் கண்களால் பார்த்த காட்சியைக் குறித்து வைத்துள்ளனர். "நிலாவிலிருந்து தீடீரென ஒரு தீக்கதிர் சீறி எழுந்து, வெகு உயரத்துக்கு எழுந்து, நெருப்புகளும் தீப்பொறிகளும் பாய்ந்தன." என அக்குறிப்பில் எழுதப்பட்டுள்ளது.

ஒரு பெரிய விண்கல் நிலாவில் மோதியதுதான் இந்தக் காட்சிக்கும் காரணமாயிருக்கும் என்று காலமே, முல்காலண்டு இருவரும் கருதுகின்றனர்.

விண்கல் மோதியதால் நிலாவில் 20 அயிரமாத்திரி (கி.மீ) அகலமுள்ள பெரும் பள்ளம் ஏற்பட்டிருக்கும்; வெகு வேகத்துடன் இவ்வளவு பெரிய விண்கல் மோதியதால் நிலா குலுங்கியிருக்கும். அந்த அசைவு இன்னமும் நீடிக்கிறது.

மாறி,மாறி இடப்புறமும், வலப்புறமும் 8-இலிருந்து, 10 ஆயிரமாத்திரி தொலைவுவரை நிலவு அசைகிறது. ஓர் அசைவு தொடங்கி முடிவதற்கு 3 ஆண்டுக் காலமாகிறது என்று அறிவியலார் கணக்கிடுகின்றனர்.

—க. மலர்அமிழ்தன். வேப்பங் குறிச்சி.

வால் முளைத்த கலைஞன்!

மேற்கு செருமனியைச் சேர்ந்த பிராங்க்பர்ட் ஆன் மெய்ன் என்ற நகரில் நடந்த ஓர் ஓவியக் கண்காட்சியில், காட்சி தொடக்கமான முதல் நாளன்றே, பெயர் தெரியாத கலைஞன் ஒருவனால் தீட்டப்பட்ட 22 ஓவியங்கள், ஒவ்வொன்றும் 100 தாலர் விலைக்கு விற்பனை ஆகி விட்டன. பின்னர் கேட்டுப் பார்த்ததில், அந்தப் படங்கள் "பேர்மெல்" என்ற சிம்பன்சிக் குரங்கினால் கிறுக்கப்பட்டவை என்று தெரிந்ததாக "இண்டர்நேசனல் எரால்டு டிரிப்யூன்" தாளிகை அறிவிக்கிறது. அந்தக் குரங்கு 3 மணி நேரத்தில் 200 "ஓவியங்கள்" தீட்டுகிறதாம்.

0

தெரிந்து கொள்ளுங்கள்.

—நா. எழில்-மகிழ்நன்

பருவங்கள்

1) இளவேனில்—Spring
2) கோடை—Summer
3) வறளை—Autumn
4) மாரி—Winter

மாதங்கள்

1. மேழம்—சித்திரை
2. விடை—வைகாசி
3. இரட்டை—ஆனி
4. கடகம்—ஆடி
5. மடங்கல்—ஆவணி
6. கன்னி—புரட்டாசி
7. துலை—ஐப்பசி
8. நளி—கார்த்திகை
9 சிலை—மார்கழி
10. சுறவம்—தை
11. கும்பம்—மாசி
12. மீனம்—பங்குனி

கிழமைகள்:

கிழமை—வாரம்
காரிக்கிழமை—சனிக்கிழமை
அறிவன் கிழமை-புதன்கிழமை

27 நாண்மீன்கள் (நட்சத்திரங்கள்)

1) புரவி—அசுவினி
2) அடுப்பு—பரணி
3) ஆரல்—கார்த்திகை
4) சகடு—உரோகிணி
5) மான்றலை—மிருகசீரிடம்
6) மூதிரை—திருவாதிரை
7) கழை—புனர்பூசம்
8) காற்குளம்—பூசம்
9) கட்செவி—ஆயில்யம்
10) கொடுநுகம்—மகம்
11) கணை—பூரம்
12) உத்தரம்—உத்தரம்
13) கை—அத்தம்
14) அறுவை—சித்திரை
15) விளக்கு—சுவாதி
16) முறம்—விசாகம்
17) பனை—அனுடம்
18) துளங்கொளி-கேட்டை
19) குருகு—மூலம்
20) உடைகுளம்—பூராடம்
21) கடைக்குளம்-உத்திராடம்
22) முக்கோல்—திருவோணம்
23) காக்கை—அவிட்டம்
24) செக்கு—சதயம்
25) நாழி—பூரட்டாதி
26) முரசு—உத்திரட்டாதி
27) தோணி—இரேவதி

மேற்குறித்தனவற்றுள், முதலில் காணப்பெறுவன தமிழ்ச் சொற்கள். அவற்றைத் தொடர்ந்து பின்னுள்ளவை பிறமொழிச் சொற்கள். பிறமொழிச் சொற்களை வழங்காது, தமிழ்ச் சொற்களை வழங்குவித்து; தண்டமிழ்க்கு அணிசெய்து மகிழுங்கள்.

(அடிப்படை: பாவாணரின் ஒப்பியன் மொழிநூல்)

சிறுகதை

பேராசை பேரிழப்பு!

முன்னொரு காலத்தில் ஒரு கிழவரும், கிழவியும் வாழ்ந்து வந்தனர். அவர்கள் மிகவும் ஏழைகள். உண்ண கோதுமை வரட்டித் துண்டு கூட அவர்களிடம் இல்லை. ஒருநாள் குளிர்காய விறகு இல்லாததால், கிழவரை அனுப்பிப் பிண்டி மரத்தை வெட்டி, விறகு கொண்டு வரச் சொன்னாள், கிழவி. உடனே கிழவர், கோடரியை எடுத்துக் கொண்டு காட்டிற்குச் சென்று, ஓர் அழகான பிண்டி மரத்தைக் கண்டுபிடித்து வெட்டுவதற்காக அதன் அருகில் சென்றார். ஆனால், அவர் வெட்டத் தொடங்குவதற்கு முன் அந்தப் பிண்டி மரம், கிழவரைப் பார்த்துத் தலை வணங்கியபடி கூறியது.

"என்மீது இரக்கம் காட்டுங்கள். உங்களுக்குத் தேவையான அனைத்தையும் நான் தருகிறேன்," என்றது.

பிண்டி மரம் பேசியதைக் கண்டு அஞ்சிப் போன கிழவர், கோடரியைக் கீழே போட்டுவிட்டுக், கைகால் நடுங்க, வீட்டிற்குத் திரும்பிப் போய், கிழவியிடம் நடந்ததைக் கூறினார்.

"அந்த மரம், தன்னை யாரும் வெட்டுவதை விரும்பவில்லை; எனவே, அதன் கிளையை வெட்டி வாருங்கள், ஆட்டிற்கு இலைகளைப் போடலாம்", என்றாள் கிழவி.

மறுபடியும் கிழவர் காட்டிற்குச் சென்று பிண்டி மரத்தைப் பார்த்துக் கூறினார்.

"என் மனைவி உன்னுடைய கிளைகளையாவது வெட்டி வரச் சொன்னாள்."

"அருள் செய்து என்னையும் வெட்டாதே; என் கிளைகளையும் வெட்டாதே; உன் மனைவி விரும்பியதெல்லாம் கிடைக்கும்" என்றது மரம்.

கிழவர் வீட்டிற்குத் திரும்பி வந்தார். என்ன வியப்பு! வீட்டைச் சுற்றி விறகுகள் குவிந்து கிடந்தன. ஆனாலும் கிழவி நிறைவடையவில்லை. எனவே கிழவரிடம் மறுபடியும் மரத்திடம் சென்று மாவு கேட்டு வரும்படி கூறினாள்.

மறுபடியும் கிழவர் மரத்திடம் சென்று கூறினார்:

"என் அன்புள்ள மரமே! என் மனைவி மறுபடியும் என்னை 'மாவு' கேட்டு வரும்படி அனுப்பி இருக்கிறாள். அருள் செய்து உன்னால் முடிந்தால் உதவி செய்" என்று மிகவும் வணக்கமாகக் கூறினார், கிழவர்.

"கிழவரே! வீட்டுக்குப் போங்கள்; நீங்கள் கேட்டது கிடைக்கும்" என்று அன்புடன் கூறியது மரம்.

கிழவர் வீட்டுக்கு வந்து பானையைப் பார்த்தார்; அது நிறைய மாவு இருந்தது.

'நிரம்ப நல்லது. இனிமேல் நாம் பசியுடன் இருக்க வேண்டியது இல்லை'' என்று மிகவும் மகிழ்ச்சியடைந்தார் கிழவர்.

ஆனால் கிழவியோ கணவரைப் பார்த்ததும் வெளியே வந்து கத்தத் தொடங்கினாள்:

"ஏய், கிழவா! நீ ஓர் உண்மையான முட்டாள்! உன் மரமண்டையில் ஏதாவது இருக்கிறதா? இரண்டு பெட்டிகள் நிறையத் தங்கம் கேட்டு வரக்கூடாதா? என்றாள்.

ஐயோ, கிழவர்! மறுபடியும் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு காட்டிற்குச் சென்று மரத்தைப் பார்த்துப் பணிவாகக் கூறினார்:

"அன்புள்ள, அழகான பிண்டி மரமே! என் மனைவி, இரண்டு பெட்டி நிறையத் தங்கம் கேட்டு வரும்படி உன்னிடம் அனுப்பியிருக்கிறாள்".

"வீட்டுக்குப் போங்கள்; கேட்டது கிடைக்கும்", என்றது மரம்.

கிழவர் வீட்டுக்கு வந்தார். அப்பொழுது மனைவி ஒரு விசியின் மீது உட்கார்ந்து கொண்டு தங்க நாணயங்களை வைத்து விளையாடிக் கொண்டிருப்பது பலகணி வழியாக நன்றாகத் தெரிந்தது. அந்த நாணயங்கள் "பளபள" வென்று மின்னின. அவர் உள்ளே போய்ப் பார்த்தார். இரண்டு பெட்டிகள் நிறையத் தங்கநாணயங்கள் இருந்தன.

கிழவருக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை; நாணயங்களை எடுத்துக் கண்குளிரப் பார்த்தார்.

"யாரும் பார்க்காதபடி தங்க நாணயங்களை எங்காவது ஒளித்து வைக்க வேண்டும்", என்று கிழவி கூறினாள்.

"ஆமாம், ஆமாம், இல்லாவிட்டால் யாராவது பார்த்துவிட்டுக் கொஞ்சம் கேட்பார்கள்; அல்லது திருடிக்கொண்டு போய் விடுவார்கள்" என்றார் கிழவர்.

இருவருமாக பெட்டிகளை ஒளித்து வைத்தனர்.

அதிகப் பணம் இருப்பது பற்றி அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் அவர்களுக்கு மன அமைதி இல்லை; தங்கத்தை யாராவது திருடிக் கொண்டு போய்விட்டால் என்ன செய்வது என்ற கவலை அவர்களுக்கு.

கிழவி பெட்டிகளை எப்படி ஒளித்து வைக்கலாம் என்று வெகு நேரம் முயற்சி செய்தாள். இறுதியாக அவளுக்கு ஓர் எண்ணம் வந்தது; கிழவரிடம் கூறினாள்:

"மறுபடியும் பிண்டி மரத்திடம் போங்கள்; எல்லாரும் நம்மைப் பார்த்து அச்சப்படும்படியாக நம் இருவரையும் மாற்றி விடும்படி கேளுங்கள்; அப்பொழுது எல்லோரும் நம்மைப் பார்த்து அஞ்சி ஓடி விடுவர்." வழக்கம்போல் கிழவர் மரத்திடம் சென்று கூறினார்:

'எங்களைப் பார்த்து எல்லோரும் அஞ்சிப் போகும்படி செய்; அனைவரும் அப்படி அஞ்சி ஓடினால், எங்கள் தங்கத்தை யாரும் தொடமாட்டார்கள்.'

முருகன்

தமிழர் முறையே நாகரிகமடைந்த குறிஞ்சிநிலை, முல்லைநிலை, மருதநிலை என்றும் முத்திணை நிலைகளுள் முதலான குறிஞ்சி நிலையிலிருந்த பொழுதே அவர் தொழுத முதல் திணைநிலைத் தெய்வம் முருகனே. முருகன் என்னும் பெயரின் முதற்பொருள் இளைஞன் என்பதே. அதன் வழிப்பொருள்கள் முதற்பொருள் அழகன், மறவன் என்பனவாகும். அழகும் மறமும் இளமையிலேயே மிகுந்திருக்கும்.

வேட்டையாடுவதையே பெருந்தொழிலாகக் கொண்டு விலங்கிடை வாழ்ந்த முதற்காலக் குறிஞ்சிநிலத் தமிழ்மக்கள், வேல் கொண்டு வேங்கையொடும் யானையொடும் பொருதும் தறுகண் மறவராயிருந்ததினால், தங்கள் தெய்வத்தையும் தலைசிறந்த மறவனாகக் கொண்டு, அதற்கேற்க இளைஞன் என்னும் கருத்தில் முருகன் அல்லது குமரன் எனப் பெயரிட்டழைத்தனர். மலைகளிலுள்ள மரங்கள் உராய்ந்து தோன்றும் செந்நெருப்பை அவன் தோற்றமாகக் கருதி அவனைச் சேயோன் (சேந்தன்) என்றனர். தம் படைக்கலமாகிய வேலையே அவனுக்கும் படைக்கலமாக்கி அவனை வேலன் என்றனர். மலங்காட்டுக் கடப்ப மலர்மாலையை அவனுக்கு

(முன்பக்கத் தொடர்ச்சி)

எண்ணத்தை அப்படியே வெளிப்படுத்துவதில்லை. பாடலின் சான்று புனிதத்தன்மை (divine); பாட்டுணர்வு தெய்வத்தன்மை மிக்கது. பாவலன் நுண்ணுணர்வும் கற்பனையும் உடையவன். ஒழுக்கம், அன்பு, நாட்டுப்பற்று, நட்புணர்பு ஆகியவை பாவலனின் மனத்தில் எப்போதும் இருக்கும்.

பாடல் தீயதை விலக்கி, அழகை உயர்த்தி, சிக்கல்களைத் தீர்த்து, வேறுபாடுகளை எல்லாம் போக்கி ஒன்றாக்கி ஒரு புத்துலகைப் படைப்பது. பாவலன் பொருள்களை மாற்ற வல்லவன்; அழகில்லாதவற்றைத் தன் ஆற்றல் மூலம் அழகுறச் செய்வான்; இத்தன்மையால் அவன் ஓர் அறிவியல் அறிஞனை ஒத்தவன். பாவலன் மகிழ்ச்சியான, சிறந்த அறிவுக் கூர்மையான மாந்தன். மிகச் சிறந்த பாவலர்கள் மாசில்லா ஒழுக்கம் நிறைந்தவர்கள்.

(குறிப்பு:- இக்கட்டுரையின்கண் 'கற்பனை' என்று குறிப்பிட்டதெல்லாம் ஆக்கக் கற்பனையே அன்றி இக்கால் பலர் கூறும் வீண் கற்பனை அன்று. இக்கட்டுரைக் கோவை செல்லியின் "A defence of poetry" என்ற கட்டுரையின் தழுவல். செல்லி ஆங்கில இலக்கியத்தில் தண்ணுணர்ச்சிப் பாடலில் (Lyric)முன் அணியில் நிற்பவர், இவர் ஓர் இறைமறுப்பாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரது 'வானம்பாடி' (To a sky lark) என்ற பாடல் மிகச் சிறந்த சில ஆங்கிலப் பாடல்களில் ஒன்று.)

0

அணியாக்கிக் கடம்பன் என்றனர். குறிஞ்சிக்கேயுரிய அழகிய பறவையாகிய மயிலை அவனுக்கு ஊர்தியாக்கினர். அந்நிலத்திற்கேயுரிய மறமிக்க போர்ச் சேவலின் வடிவை அவன் கொடியுருவமாக்கினர். தாம் உண்ணும் தினைமாக் கொழுக்கட்டையையும் தாம் பருகும் தேனையும் கள்ளையும் அவனுக்கு உணவாகப் படைத்தனர். குறிஞ்சிநிலத் தலைவிக்கு அல்லது பெண்மணிக்கு இடும் வள்ளி (கொடி, கொடிச்சி) என்னும் பெயரை அவன் தேவி பெயராக்கினர்.

அம்பலக் கற்றூணில் உருவம் பொறிக்கப்பட்டமையால் அல்லது உறைவதாகக் கருதப்பட்டமையால், முருகன் கந்தன் எனப்பட்டான். கந்து—தூண், கந்து—கந்தன்.

ஆறுமுகம் என்பது பிற்காலத்தில் முருகன் என்னும் ஒரு பாண்டியனின் ஆறுபடை வீடுகள் பற்றியெழுந்த பெயராகத் தோன்றுகின்றது. முகம்—இடம், யானையூர்தியும் அவ்வேந்தனதே.

இவையாவும் ஆரியர் வருமுன் தமிழகத்தில் நிகழ்ந்த செய்திகளாகும். ஆரியர் இந்தியாவிற்கு வந்த காலமே கி.மு. 2000–1500 தான். இறைவன் பெயரால் என்ன சொன்னாலும் நம்புமாறும் எதைக் கேட்டாலும் தருமாறும் மதத்துறையில் மடப்பட்ட இந்தியப் பழங்குடி மக்களையெல்லாம் ஏமாற்றால் அடக்கியொடுக்கி, தாமே என்றுந் தலைமையாயிருந்து இன்பமாய் வாழ எண்ணிய தன்னல ஆரியப் பூசாரியர், தமிழ் நாகரிகம் தலைசிறந்துள்ள தென்னாட்டொடு கி.மு. 1200 போல் தொடர்பு கொண்டபின்; தமிழ்த் தெய்வங்களையும் மதங்களையும் ஆரியப்படுத்தும் முயற்சியில், முருகனைப் பனிமலையடிவாரச் சரவணப் (நாணல்) பொய்கையில் பிறந்தானென்று பகுத்தறிவிற் கொவ்வாத அநாகரிகக் கதையொன்று கட்டி, அவனுக்குச் சரவணபவ (நாணற் காட்டிற் பிறந்தவன்) என்றும் சுப்பிரமண்ய(ன்) (பிராமணர்க்கு நல்லவன்) என்றும் பெயரிட்டு; குமரன், கந்தன் என்னும் பெயர்களைக் குமார, ஸ்கந்த என்று திரித்தும் ஆறுமுகம் என்பதை ஷண்முக என்று ஒருபகுதி மொழி பெயர்த்தும், இருகை முருகனைப் பன்னிருகையனாக்கியும், காளைப் பருவத்தானைப் பையற் பருவத்தானாக்கிக் காட்டியும், தெய்வயானை என்னும் வேறொரு தேவியையுஞ் சேர்த்தும், பிறவாறும் உண்மைகளை மாற்றித் தமிழர் முற்றும் நம்புமாறு செய்து விட்டனர்.

ஆரிய மதமெல்லாம் பல்வேறு சிறுதெய்வ வேள்வி வழிபாடே யென்பதையும், வேதத் தெய்வங்களுள் முருகன், சிவன், காளி, திருமால் என்னும் நால்வரும் இல்லை யென்பதையும் நன்றாயறிதல் வேண்டும்.

o

—பாவாணர்.

('இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்' என்னும் நூலிலிருந்து)

காண்டா விலங்கு

—மா. பூங்குன்றன். அறி.இ, க.மு.

மாந்த இனத்தின் நெருக்கடி மிகுந்துவரும் இக்காலத்து விலங்குகள் அருகி வருவதில் வியப்பில்லை. இவற்றில் மாந்த இனத்திற்குப் பயன்படாத விலங்குகள் அழிந்து வருவதை யாரும் மிகுதியாகக் கவனிப்பதில்லை. இவ்வகை விலங்குகளில் ஒன்றுதான் காண்டா விலங்கு இஃது ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் உள்ள விலங்காகும். இந்த விலங்கிற்குச் சில் வியப்பான தன்மைகளும், பழக்கங்களும் உண்டு.

காண்டா விலங்கிற்குக் கண் பார்வை மிகக்குறைவு. 100 மாத்திரி (மீட்டர்)க்கு மேல் இதனால் பார்க்க முடியாது. ஆனால் இதற்கு மிகக் கூர்மையாகக் கேட்கும் திறனும், நுகரும் திறனும் உண்டு. நம் மேனியிலிருந்து அடிக்கும் ஒருவகை மணத்தைக் கொண்டே அது நம்மை அறிந்து விடும். நம் வழியாகக் காற்று அதன்மேல் அடித்துக் கொண்டிருக்கும் போது அதன் கவனத்தைத் திருப்பாமல், நாம் அதன் பின்புறம் கூட செல்ல முடியாது.

இதன் தோற்றம் பார்ப்பதற்குக் கொடுமையாக இருப்பினும், இயல்பாக அமைதியான விலங்காகவே உள்ளது. அதற்கு அதிர்ச்சி யூட்டுமாறு நடந்தாலோ, தன் கன்றுடன் இருக்கும் போது தாக்கினாலோதான் அது தன் இயல்பு நிலையினின்று மாறுகிறது. ஆனாலும், முதல் முறை அதன் தாக்குதலில் தோல்வியுறுமானால் மறுமுறை தாக்க முற்படுவதில்லை.

(முன்பக்கத் தொடர்ச்சி)

"கிழவரே, வீட்டிற்குப் போங்கள், மாந்தர்கள் என்ன, விலங்குகள் கூட உங்களைப் பார்த்து அஞ்சி ஓடும். நீங்கள் கேட்டவை கிடைக்கும்" என்றது மரம்.

கிழவர் வீட்டிற்குத் திரும்பி வந்தார். அவர் கதவைத் திறந்தார்.

"நல்லது, நம்மைப் பார்த்து மாந்தர்கள் மட்டும் என்ன, காட்டில் உள்ள கொடிய விலங்குகள் கூட அஞ்சி ஓடும்படி செய்வதாகப் பிண்டி மரம் வாக்குறுதி அளித்துள்ளது", என்றார் கிழவர்.

அவர் சொல்லி முடித்தவுடனேயே, அவர் உடலும், கிழவியின் உடலும் மிகவும் தடியான, பழுப்பு நிறமுடைய மயிர்களால் மூடிக் கொண்டன. அவர்களுடைய கைகளும், கால்களும் கரடியின் பாதங்களைப் போல் மாறிவிட்டன.

அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் பேச முயன்றனர். ஆனால் பேச முடியவில்லை; அவர்கள் தொண்டையிலிருந்து வந்ததெல்லாம் ஒரு கொடுமையான கத்தல்தான்.

இப்படியாகப், பேராசைக்கார கிழவரும், கிழவியும், கரடிகளாக மாறினர். ○

காண்டா விலங்கிற்கு ஒரு கொம்பு உண்டு. இது வெறும் இறுகிய மயிர்க் கற்றையாலானது. இதை வலுவான ஓர் அடியாலேயே வீழ்த்திவிடலாம். இஃது அதன் எலும்புக் கூட்டுடன் தொடர்புடையது அன்று. இவ்வாறு இந்தக் கொம்பு உடைந்து போகுமானாலும் அக்கொம்பு மீண்டும் வளர்ந்து விடக்கூடியது.

இவ் விலங்கு ஏறத்தாழ எழுபது ஆண்டுவரை வாழும். மூன்று அல்லது நான்கு ஆண்டிற்கு ஒருமுறை கன்று ஈனக் கூடியது. இன்னொரு குட்டி ஈனும்வரை முதல் குட்டியைத் தன்னுடனேயே பேணிக் கொண்டிருக்கும். கன்று தாயின் மீது வைத்திருக்கும் அன்பு அளவிடற்கரிது. தாய் இடையிலேயே இறந்துபடுமானால், கன்று அவ்விடத்திலேயே அசையாது நின்றுவிடும். பெரும்பாலும் அது அங்கேயே தன் முடிவையும் தேடிக்கொள்ளும்.

இச் செயலும் மற்றொரு செயலும் தான் இவ்விலங்கினம் குறைந்து போனதற்குக் காரணியமாக நிற்கின்றன. அஃது என்னவெனில், பொதுவாக, இவ்விலங்கு ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே சாணமிடும் பழக்கமுள்ளது. சாணக் குவியலைப் பார்த்த உடன் எல்லாக் காண்டா விலங்குகளுக்கும் சாணமிட வேண்டும் என்ற உணர்வு தோன்றி விடும். அடுத்துச் சாணமிடுவதற்குச் சாணக் குவியலை நோக்கிப் பின் புறமாகத்தான் செல்லும். அந்நேரத்தில்தான் இது வேட்டைக்குட்படுகிறது.

இவ்வாறுதான் காண்டா விலங்கு உலகில் அருகி வருகிறது. இக் காண்டா விலங்கு நன்றாக நீந்தத் தெரிந்த விலங்கு. மேலும் இதன் தோல் மிக மொத்தமானதும் கரடுமுருடானதுமாக இருக்கிறது. இன்னும் சில ஆண்டுகளில் இவ்விலங்கே உலகில் எங்கும் இருக்காத அளவு அதன் இனம் அருகி வருகிறது. o

யாருக்கு யார் உதவி செய்வது?

— நீரு பிலாதனேவா.

அம்மா ஒரு வாளி நிறையத் தண்ணீர் எடுத்து வந்தாள். அவள் மகன் அரசன், அவள் பக்கத்தில் வந்து கொண்டிருந்தான். அரசனுக்கு ஐந்து ஆண்டு ஆகிறது.

அம்மாவைப் பிடித்துக் கொண்டு வந்து வழக்கப்பட்டுப் போன அரசன், வாளியின் கைப்பிடியைத் தானும் பிடித்துக் கொண்டு வந்தான்.

"அரசன்! இப்படிப் பிடித்துக் கொண்டு வருவதன் மூலம் நீ எனக்கு உதவி செய்கிறாய், இல்லை கண்ணே!" என்று கேட்டாள் அம்மா, அன்பாகவும் பரிவாகவும்!

"உனக்கு உதவியா! நீ என்ன சொல்கிறாய் அம்மா? நான் வாளியை எடுத்து வருகிறேன். நீ தான் எனக்கு உதவி செய்கிறாய்" என்று விடை சொன்னான், அரசன். o

"பாட்டுக்கொரு பாதுகாப்பு"

மூலம்: செல்லி   தமிழில்: சி. நா. செந்தமிழ்ச்செல்வன்

பாடல் கற்பனையின் குரல். அதில் பகுத்தறிவை (reason) விட கற்பனையே மேலோங்கி நிற்கிறது; எண்ணங்களும் உணர்வுகளும் நுட்பம் வாய்ந்தன; அவ்விரண்டிற்கும் பாடல் உருக்கொடுக்கின்றது. மாந்தன் பிறவியிலேயே கற்பனையைப் பெற்றிருக்கிறான்; அதன் மூலம் தன் எண்ணங்களையும் உணர்வுகளையும் தொடர்ந்து வெளியிடுகின்றான்; அழகுணர்வும்-ஒழுங்குணர்வும்-இசையுணர்வும் மாந்தனுக்கு இயல்பாகவே தோன்றுகின்றன. பண்டைக் காலத்தே மாந்தன் பல உண்மைகளை இயற்கையின் இடத்தும் தன் வாழ்விலும் கண்டான். அவற்றை வெளியிட ஒரு சிறந்த கருவியாக அமைந்ததே பாடல்.

மாந்தன் பின்பற்றும் இயல்புடையவன். ஆனால் அப் பின்பற்றல் ஒரு தொடக்க நிலைப்பட்ட கலையாகும். பழங்கால மாந்தன் நடனமாடவும் பாடவும் பின்பற்றல் முறையைப் பயன்படுத்தினான். அஃது அவனுளத்தை மகிழ்வித்தது. பின்பற்றல் முறையை வளர்க்கத் தொடங்கினான்; பின்புதான் அவனுக்குரிய இலக்குகள் தோன்றின; எனவே அவனுக்கு மிகவுயர்ந்த படைப்புகளின் மீது ஆர்வம் எழுந்தது.

விலங்குகள் பார்த்துச் செய்தலைத் தாண்டி எதையும் செய்ய மாட்டா. ஆனால் மாந்தனோ அதனைக் கடந்து புதியன காணும் திறம் பெற்றுள்ளான்; இது மாந்தனின் உயர்வை விளக்குகிறது. கற்பனை படைப்புத்திறனின் அடித்தளம். கண்டுபிடிப்பாளர்கள் கட்டிடங் கட்டுவோர்: கலைஞர்கள், மதத்தலைவர்கள் எல்லாம் கற்பனைத்திறன் பெற்றவர்களே!

ஓவியர்களுக்கும் சிற்பிகளுக்கும் வண்ணங்களும் உருவங்களும் படைப்புகளாகும்; அவை எல்லாம் புறவயத்தன்மை பெற்றவை! ஆனால் பாவலனுக்கோ இலக்குகளும் உணர்வுகளும் தேவைப் படுகின்றன. அவன் கருவிகளோ சொற்கள், மொழி நடை, கற்பனை ஆகியனவாம். பாடல் எண்ணத்தையும் உணர்வையும் கண்டிப்பாக உரைக்க வேண்டும். அன்றாட நடைமுறைச் சொற்கள் (mere words) உணர்வைச் சிறப்பாக எடுத்துரைக்கப் போதுமானவையல்ல. 'இசை' ஓசையிலும் அடியிலும் அடங்கியுள்ளது. எனவே, உணர்வு மிக ஆழப் பதிவது இசையின் மூலந்தான்.

வெற்றிசை மட்டும் பாடலாகாது; ஒருசில உரைநடை ஆசிரியர் களும் பாவலர் போல் மதிக்கத்தக்கவர்களே! பிளேட்டோ, பேக்கன் ஆகியோர் அத்தகையவர்கள்! பிளேட்டோவின் உரை நடை இசை, கற்பனை, உண்மை, நுண்மை ஆகிய குணங்களைப் பெற்றிருக்கின்றன. அவையெல்லாம் பாடலுக்குரியன வாகும். பேக்கனின் உரைநடை மிகவுயர்ந்த இசைத் தன்மையைப் பெற்றிருக்கிறது.

மெய்யறிஞர்களும் பாவலர்களும் உண்மையைக் காட்டுபவர்கள். சேக்சுபியர், தாந்தே, மில்டன் ஆகிய பாவலர்கள் எல்லாரும் மெய்யறிஞர்களும் ஆவர். அவர்கள் அழியா உண்மைகளைக் கண்டு உரைத்துள்ளனர்.

பாடல்கள் அழியா உண்மைகளை உரைக்கும் உருவங்கள். அவை காலத்தை வென்று நிற்கும் ஆற்றல் பெற்றன. எனவே, பாடல் வரலாற்றினின்றும் வேறுபடுகிறது. பாடல் உவப்பைத் தன்னுள் அடக்கியுள்ளது; அஃது அறிவுடனும் மகிழ்ச்சியுடனும் கலந்ததாகும். பாடல் அறநெறிகளைப் பெற்றது; அந்நெறிகள் மாந்த வாழ்க்கைக்குப் பயனுள்ளவை. மாந்தனுக்கு இருவகைத் தேவைகள் இன்றியமையாதன: (1) புறத்தேவை (2) உளத்தேவை. இவ்விரண்டில் புறத் தேவையோ அறிவியலால் நிறைவுறுவது; ஆனால் மற்றொன்றோ பாடலால் நிறைவடையத்தக்கது. (பாடலோ, கற்பனையால் நிறைவடைவது.) கற்பனை அறநெறியை உணர்த்த உதவும் ஒரு கருவி.

பாவலன் அறநெறியை வெளிப்படையாகக் கூறான்; அவன் தன் கருத்து சரியானது அல்லது தவறானது என்று உருக் கொடுக்க மாட்டான்; அவன் அறநெறியின் நோக்கத்தை நலிவடையச் செய்யான். இரக்க உணர்வு நல்வழிக் கிட்டுச்செல்ல உதவும், அவ் விரக்க உணர்வு கற்பனையின் விளைவு. கிரேக்க நாட்டில் அறநெறிகள் நாடகங்கள் மூலம் கற்பிக்கப்பட்டன. எத்தீனிய நாடகம் எத்தீனியர் களின் உயர்வைக் காட்டும் கண்ணாடி. நலிவும் உணர்வும் துன்பியல் நாடகங்கள் மூலம் உரைக்கப்பட்டன.

நாடகம் தன் நிலையில் இருந்து தாழ்ந்த போது அறநெறிகளி னின்று மக்களும் பிறழத் தொடங்கியுள்ளனர். முன்னிலை எய்தும் காலத்தில் (Restoration Period) நாடகத்திற்கு ஏற்பட்ட நலிவு (deca-dence) குமுகாயத்தையும் தாக்கியது.

பாடல் அறிவியல், அரசியல் மெய்ம்மம் (Political-philosophy) ஆகியவற்றைக் காட்டிலும் உயர்ந்தது. இருவகைப் பயன்கள் இரு வகை மகிழ்ச்சிகளுடன் தொடர்புடையன. ஒருவகை மகிழ்ச்சி பொதுவாக என்றும் உள்ளது; மற்றது நிலையில்லாக்களிப்பு. அறி வியலும் அரசியல் மெய்ம்மமும் நிலையில்லாக் களிப்பை அளிப்பன; ஆனால் பாடலோ நிலையான அழியாத உவப்பை அளிப்பது.

இவ்வுலகம் அறிவியலாரையும், பகுத்தறிவாளர்களையும், திறனாய் வாளர்களையும் கொடுக்க முடியும்; ஆனால் பாவலர்கள் இவ்வுலகால் அளிக்கப்பட்டவர்கள் அல்லர். பாடல் உள்ளுணர்வின் வெளியீடு. பாடல் எழுதத் தொடங்கையில் அவ்வுணர்வு குறையத் தொடங்கு கிறது. உலகிலேயே மிகச்சிறந்த பாடல் கூட அப்பாவலனின் முழு

சொற்கள் சொல்லும் கதைகள்.

(To know a word is to know a truth)

பன்மொழிப் புலவர்: இரா. மதிவாணன். க.மு

20. ஒழிக

பழங்காலத்தில் ஒழி என்னுஞ்சொல் 'போ' என்று பொருள் தந்தது. ஒழிக என்ருல் செல்லுங்கள், போங்கள் என்று பொருள் இப்பொழுது, ஒழிக என்னுஞ்சொல், போகட்டும், தொலையட்டும், கெடட்டும், அழியட்டும் என்று பொருள்படுகிறது.

வீட்டை ஒழிக்கிருர்கள் என்பது வீட்டைக் காலி செய்கிருர்கள் என்று, பொருள்படும். ஒழிச்சல் என்பது, காலி செய்தலையும் (vacation), எல்லா வேலைகளையும் செய்து முடித்து ஓய்தலையும் குறிக்கும், வீடு காலியாக இருக்கிறது என்று கூறுவதைத் தவிர்த்து, வீடு ஒழிவாக (vacant) இருக்கிறது என்று கூறலாம். வேலை காலியில்லை என்பதை, வேலை ஒழிவு இல்லை எனலாம்.

21. நோய்

நோவு தருவது நோய் என்று கருதப்படுகிறது. ஆனுல், நோவு தராத (வலியில்லாத) நோய்களும் உள்ளன. யானைக்கால் நோய் வந்தவர்க்கு வலி இருப்பதில்லை.

நோய் என்னும் சொல்லுக்குச் சிலந்தி, என்று பொருள். சிலந்தியைப் போன்று புடைத்துக் கொண்டிருக்கும் வீக்கம் அல்லது கட்டி, தொடக்க காலத்தில் நோய் எனப்பட்டது. பிறகு, அனைத்து நோய்களுக்கும் பொதுப் பெயராகி விட்டது.

ஆங்கிலத்தில் cancer என்னும் சொல்லுக்கு crab—நண்டு என்று பொருளிருப்பதை ஒப்பிட்டுக் காண்க.

22. வைகுவா

வைகுதல் என்ருல் தங்குதல் என்று பொருள். வைகல் என்பது அனைத்துயிர்களும் தங்கி ஓய்வு கொள்ளத்தக்க இராக் காலத்தைக் குறித்தது. பிறகு ஒரு நாளைக் குறித்தது. வைகறை என்னும் சொல்லும் இதனடியாகப் பிறந்ததே.

நேரங்கழித்து (தாமதித்து) வருதலை மலையாளத்தில் வைகீடு என்பர். தாமதித்து வருபவனை வைகி வருகிருன் என்று சொல்லலாம். யாருக்காகவாவது காத்திருப்பதையும் வைகியிருத்தல் குறிக்கும். உங்களுக்காகக் காத்திருக்கிறேன் என்பதைத் தெலுங்கில் 'மீகோசம் வேசி உன்னுனு' என்பர்.

ஆத்திசூடி

மொழிபெயர்ப்பு: க. சின்னப்பன், தர்பன், தெ. ஆப்பிரிக்கா.

89. மிகைபடச் சொல்லேல்.
Don't over speak.
90. மீதூண் விரும்பேல்
Don t desire over eating.
91. முனைமுகத்து நில்லேல்.
Don't be idleat the battlefield.
92. மூர்க்கரோ டிணங்கேல்.
Don't associate with violent people.
93. மெல்லினல்லாள் தோள் சேர்.
Live with a kind wife.
94. மேன்மக்கள் சொற் கேள்.
Listen to the words of the wise.
95. மை விழியார் மனையகல்.
Don't visit houses of bad women.
96. மொழிவதற மொழி.
Speak decisively.
97. மோகத்தை முனி.
Give up yearning for transient pleasure.
98. வல்லமை பேசேல்.
Don't boast about your ability.
99. வாதுமுற் கூறேல்.
Don't provoke argument with elders.
100. வித்தை விரும்பு.
Love to learn arts.
101. வீடுபெற நில்.
Let your life seek salvation.
102. உத்தமனாயிரு.
Be an upright person.
103. ஊருடன் கூடி வாழ்.
Live in peace with countrymen.
104 வெட்டெனப் பேசேல்.
Don't speak bluntly to others.
105. வேண்டி வினை செயேல்.
Don't act anticipating reward.
106. வைகறைத் துயிலெழு.
Awake before sunrise.
107. ஒன்னாரைத் தேறேல்.
Don't trust your enemy.
108. ஓரஞ் சொல்லேல்.
Don't be partial in your opinion.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்).